# ஆளை மாற்றி, ஆடையை மாற்றி ஆடுகளத்தைத் தக்கவைத்துக் கொண்ட இனவாத பூதம்




ஈழ ஆய்வு நிறுவனம் (EROS)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆளை மாற்றி, ஆடையை மாற்றி, ஆடுகளத்தைத் தக்கவைத்துக் கொண்ட இனவாத பூதம்

குறித்த காலத்துக்கு முன்பாகவே, இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது. சட்டத்தைத் திருத்தி மீண்டும் 3-வது முறையாக ஜனாதிபதி ஆகவேண்டும் என்ற **இராஜபக்சே** அவர்களின் ஆசையினால், கொண்டுவரப்பட்ட தேர்தல் என்பது பலரும் அறிந்த உண்மையே.

மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்ற ஜனாதிபதி இராஜபக்சேவின் ஆசையை, எப்படி 2009-ல் நடந்த போரில் அப்பாவித் தமிழர்களை உயிருடன் மண்போட்டு மூடினாரோ, அதைப்போல் தமிழ்ப் பேசும் மக்களும் மண்போட்டு மூடிவிட்டனர். இதன் விளைவாக புதிய ஜனாதிபதியாக **மைதிரி பால சிறிசேன** தேர்வாகியுள்ளார்.

ஆனாலும், நடந்துமுடிந்த தேர்தல் பலவிதமான எதிர்பார்ப்புகளை, அரசியல், சமூகத்தளத்தில் உருவாக்கியுள்ளது. தன் தரப்பில், இந்த புதிய அரசியல் சூழ்நிலையை எவ்வாறு நோக்க வேண்டும்? என்பதே இந்த வெளியீட்டின் மூலம் ஈழ ஆய்வு நிறுவனத்தின் நோக்கமாகும்.

## கற்றுக்கொண்ட பாடங்களை நோக்காது உறுதிப்பத்திரம் வழங்குவது – அறியாமை

சர்வதேச குற்றவியல் சட்டமும், கூடவே ஒவ்வொரு நாட்டின் குற்றவியல் சட்டமும், பின்வருமாறு ஊன்றி வலியுறுத்துகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சட்டம் :**

1. கொலைகளை – செய்வதற்கு திட்டமிட்டு மூளையாக செயல்படுபவர் தண்டனைக் குற்றவாளி என்றும்
2. கொலைகளை – களத்தில் நின்று நடத்தியவர்கள் (தனியாக என்றும் கூறலாம்) தண்டனை குற்றவாளிகள் என்றும்
3. கொலைகளை – தடுக்காது-உதவி செய்தவர்களும் தண்டனைக் குற்றவாளிகள் என்றும் அறிவிக்கிறது.

இந்த மூன்று வகையினரும், 'தண்டனைக் குற்றவாளிகள்' என்று பிரகடனம் செய்கிறது. குற்றவியல் சட்ட நடைமுறை, கூடவே தண்டனை வகைகளும் மாறுபடுகின்றன.

2009-ல் அரங்கேறிய இனப்படுகொலையின் மூளையாக செயல்பட்டவர்கள் யார்? யார்? என்பதையும் தளபதியாக களமிறங்கியவர் யார்? என்பதையும்; கொலை செய்தவர்களுக்கு ஆதரவாக மந்திரி சபையிலிருந்து ஆதரவு கொடுத்தவர்கள் யார்? யார்? என்பதையும், தமிழ்த் தேசம் ஒருபோதும் மறந்துவிடாது.

## கற்றுக் கொண்ட பாடங்களை நோக்காது உறுதிப்பத்திரம் வழங்குவது –அறியாமை

தண்டனைக்குரிய குற்றவாளிகள், "தமிழ்த் தேசத்தின் இரட்சகர்கள்" என்று நம்பச் சொல்வது அறியாமை மட்டுமல்லாது அது கயமையின் வெளிப்பாடாகும்.

ஆன்மீக உலகம், பாவம் செய்தவர்களுக்கு அதனின்று மீள பரிகாரம் செய்யச் சொல்கிறது.

அரசியல் உலகம், ஜனநாயக நடைமுறைகளை விரைந்து அமல்படுத்தும்படி பரிகாரம் பகர்கிறது.

பரிகாரம் செய்வதற்கு முன்பே, புண்ணியவான்களாக சித்தரிப்பதும், அவர்களை தியாகத்தின் திருவுருவம் என்று விவரிப்பதும் ஆரோக்கியச் சூழலை ஒருபோதும் உருவாக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வரலாற்று நடைமுறை' என்னும் உரைகல்லில் உரைத்துப் பார்க்காமல் புதிய ஜனாதிபதிக்கு நற்சான்றுப் பத்திரம் வழங்குவதை தமிழ்த்தேசம் ஒருபோதும் அங்கீகரிக்காது.

'இனவாதம் என்ற பூதம்' கோரத்தாண்டவமாடி 2009-ல் இனப்படுகொலைகளைச் செய்து முடித்தது. அவை ஒவ்வொன்றாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் போது, அவை வெளிப்படாமல் தடுக்கவும், கடுமையாக நடந்து கொண்டது. மனித நேயம் கிராமுக்கு என்ன விலை? என்று கேட்கும் அளவிற்கு நெருக்கடிகள் முற்றிக் கொண்டேபோனது.

இவ்வாறான நேரத்தில் தான் இனவாத பூதம் சர்வதேச கண்டனங்களுக்குள்ளானது. மனித நேயப்பற்றாளர்களின் கடும் விமர்சனத்துக்கு ஆள்பட்டது. ஐரோப்பாவும், அமெரிக்காவும் ஒன்று சேர்ந்து மிரட்டியது. இந்தியாவின் புதிய ஆட்சியாளர்களும், தங்கள் அளவுக்கு, புதிய இராஜ தந்திர நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர். ஐ.நா.வும் தன் பங்கிற்கு கடுமை காட்டியது.

இவ்வாறான பலமுனைத்தாக்குதலுக்கு ஆளான இனவாத பூதம், பழைய முறையில் 'தங்களால் ஆள முடியாது' என்ற முடிவுக்கு வந்தது. அதன் விளைவாக ஆளை மாற்றிவிட்டால் எல்லோரையும் ஏமாற்றிவிடலாம் என்று தந்திரங்களை மேற்கொண்டது.

<u>விளைவு</u> :

இனவாதம் தன்னை தகவமைத்துக் கொண்டது. தனது தலைவராக அய்யன் சிறிசேன என்று பிரகடனப்படுத்தியும்விட்டது.

இங்கு ஆடை மாற்றப்பட்டு, ஆள் மாற்றப்பட்டு, அதிகாரத்தை தக்கவைத்துக் கொண்டது இனவாதம்.

ஆம்! இனவாதம் என்ற கருத்தியல் ஆக்கத்தை இவர்கள் விழுங்கியே ஆகவேண்டும். அவை கசப்பானதுதான் என்று தெரிந்து இருந்தும், அதிகாரபீட ஆசைகள் இவர்களை விட்டுவைப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் விலையாகக் கேட்பது தமிழ்த்தேசத்தையும், தமிழர்களின் உயிர்களையும், இவர்களின் ஒரே முழக்கம் ஈழத்தமிழர்கள் அடிமையாக இரு! இல்லையேல் செத்துப்போ!

இனவாதம் என்ற பூதத்திடம், மனிதநேயம் பேசினால் – தனக்குத் தெரியாத மொழியில் ஏன் இவர்கள் பேசுகிறார்கள் என்று எதிர் கேள்விதான் கேட்கும்.

இனவாதம் தமிழ்த்தேசத்தை எவ்வாறு நயவஞ்சகமாக ஏமாற்றியது என்பது உலகறிந்த உண்மை. அது தமிழ்த் தேசத்தை மட்டுமே ஏமாற்றியது இல்லை. அவர்களிடம் ஏமாந்தது பாரத தேசமும் தான்.

1987–ல் இனவாதத்தின் ஜனாதிபதி ஜெயவர்த்தனே இலங்கை – இந்திய ஒப்பந்ததத்தில் கையெழுத்திட்டு இந்திய இராணுவத்தை வரவழைத்தார். பூதத்தின் பிரதமராக இருந்த பிறேமதாச இந்திய இராணுவம் ஆக்கிரமிப்பு இராணுவம் என்று கூறி ஒப்பந்தத்தை நடைமுறைக்கு கொண்டுவராது தடுக்க புலிகளுக்கு உதவி செய்து வெளியேறவும் வைத்தது. இனவாதம் தன்னுள்ளே இந்திய எதிர்ப்புவாதத்தையே கொண்டுள்ளது.

இந்தியாவோ, 'நான் உனது நண்பன்' தான் என்று 25 வருடங்களாகியும் அதிகாரப் பரவல் பற்றி பேசிக் கொண்டே இருக்கிறார்கள். முந்தைய ஜனாதிபதி இராஜபக்சே 13–வது திருத்தம் காலாவதியாகிவிட்டது என்ற அறிவிப்பையும் செய்தார்.

இனவாதம் ஏற்படுத்திய இனப்படுகொலையையும், அதன் வடுக்களையும், மாயாஜாலங்களையும் கண்டு ஏமாறும் நிலையில் தமிழ்த்தேசம் இனி இல்லை.

## பாரத தேசத்திற்கு தமிழ்தேசத்தின் விண்ணப்பம்!

நடைபெற்ற தேர்தலால் காட்சிகள் மாறியுள்ளன. இனப்படுகொலையின் வடுக்களும், அது உண்டாக்கியிருக்கும் அவலங்களும் இன்னும் மாறவில்லை என்பதே எதார்த்தம் இவைகளைத் தாங்களும் அறிவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35 வருடங்களுக்கு மேலாக, தமிழர் தந்தை செல்வா ஒரு வார்த்தையை உச்சரித்தார்; அது "இனி தமிழ் மக்களை ஆண்டவன்தான் காப்பாற்ற முடியும்" என்பதாக அமைந்தது.

அதைத் தொடர்ந்து வந்த திரு. பிரபாகரன் அவர்களும் 1987-ல் இலங்கை - இந்திய ஒப்பந்த நிகழ்ச்சியைச் சுட்டி சுதுமலையில் பேசியபோது "நாங்கள் ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களை நம்புவதற்கில்லை, இந்தியாவை நம்பித்தான் ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்" என்றார்.

ஆக, தமிழ்த்தேசம் ஒருபோதும் பவுத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களை நம்பவில்லை. அது தமிழ்த்தேசத்தின் வரலாற்று அனுபவம், சித்திரவதைகளின் எதிரொலிப்பு.

சுதந்திரம் வேண்டுமென்று 1977-ல் பிரகடனம் செய்தது தமிழ்த்தேசம். 1981-ல் மாவட்ட அபிவிருத்தி சபை என்றார்கள் பேரினவாத ஆட்சியாளர்கள், அபிவிருத்தி சபை எங்கே என்று கேட்டபோது, கலவரங்கள் வெடித்தன.

1987-ல் அதிகாரப் பகிர்வு செய்கிறேன் என்றது இனவாத பூதம், கொஞ்ச நாட்களிலேயே அதை மறுத்தது. பயங்கரவாதிகளுக்கு ஏன் அதிகாரப்பகிர்வு செய்ய வேண்டும் என்றது.

பின்பு அதிகாரப் பகிர்வை, காது கிழியக் கத்திய போது பயங்கரவாதிகளுக்கு எதிராகப்போர் என்று போரைத் தொடுத்தது.

2009-ல் போர் முடிந்தது. அதிகாரப் பகிர்வை பாரதம் முன்வைத்தபோது, அது காலாவதியாகிவிட்டது என்றும், இப்போது அபிவிருத்தியை மட்டும் தான் கேட்கலாம் என்று அறுதியிட்டது. அபிவிருத்தி எங்கே? என்று கேட்டால், நாம் செய்வதுதான் அபிவிருத்தி.

இந்தியாவின் உதவிகளைப் பெற்று கட்டிய வீடுகளில், சிங்களர்களைக் குடியமர்த்துவது, தமிழர்களின் நிலங்களைப் பறிப்பது; இராணுவ நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த சாலைகளைப் போடுவது, பாரிய திட்டங்களை தமிழ்ப் பிரதேசங்களில் கொண்டுவந்து சிங்களர்களைக் குடியேற்றுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம்களின் கோவில் தேவாலயம் மசூதிகளை இடித்து பவுத்த கோயில்களைக் கட்டுவது இன்னோரன்ன பிற திட்டங்கள் அடங்கும் என்று, எச்சில் இலையைக் காட்டியது வரலாற்று நெடுகிலும் அனுபவம் இது தான்.

பாரதம் உரிமை கொடு என்று நெருக்கினால் அது சீனாவிடம் சரணடையும். சீனாவும் மிரட்டினால் அது பொருத்தமான ஆளைத் தேடித் தெரிவு செய்யும்.

சீனா ஒருபோதும் ஈழத் தமிழர் பிரச்சனையில் தலையீடு செய்வதில்லை. தமிழர்களுக்கென்று உதவியும் செய்வதில்லை அது தனது பிராந்திய நலனுக்காக பேரினவாதிகளைப் பயன்படுத்திக் கொள்ளும். பேரினவாதிகளின் தமிழர்களுக்கெதிரான அட்டூழியங்களைக் கண்டு கொள்ளாதிருக்கும்.

என்ன செய்வது?.... இனவாதம் என்ற பூதத்திடம் மனிதநேயத்தை எதிர்பார்த்தால் அது இந்திய எதிர்ப்புவாதத்தை உமிழ்ந்துவிடும். ஏன் இப்படிச் செய்கிறாய் என்று கேட்டால் உங்களால் எங்களைப் புரிந்து கொள்ளமுடியாது என்று அகங்கரிக்கும். விவேகத்துடன் சுவடிய விழிப்புத் தேவை.

## கடந்து வந்த பாதையில் பாரதம் முன்வைக்கும் தீர்வுதான் என்ன?

### I. <u>சம உரிமைத்திட்டம்</u> :

சிங்களவர்களுக்கு என்ன உரிமைகள் உள்ளதோ, அதே உரிமை தமிழர்களுக்கும் கிடைக்கப் பெற செய்வது. <u>இதுதான் சிங்களர்களுக்கும் உள்ள உரிமை.</u>

பவுத்த சிங்கள பேரினவாத அரசு தமிழர்களுக்கு எதிரான போரைத் தலைமை தாங்கி இனப்படுகொலையை நடத்திய இராணுவத் தளபதியை சிறையில் அடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதநேய பற்றாளர்களான சிங்களப் பத்திரிகையாளர்கள் 85 பேர் உயிர் பயத்தில் வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

பல பத்திரிகையாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர். பேரினவாத ஆட்சியின் சிங்கள மனிதநேயர்களும் அச்சத்துடன் தான் வாழ்கின்றனர்.

இதுதான் சம உரிமை என்றால் எதற்கு இந்த சமஉரிமை? யார்தான் விரும்புவர்?

## ஒன்றுபட்ட இலங்கையின் தீர்வு?

2/3 பெரும்பான்மையைக் கொண்ட பவுத்த சிங்கள பேரினவாத அரசு பாராளுமன்றத்தில் 1/3 பங்கிற்கு குறைவாகக் கொண்ட தமிழ்ப் பேசும் மக்களின் எண்ணிக்கை எந்தக் காலத்திலும் பெரும்பான்மை பெறாது சட்டமாகாது.

கடந்த 67 வருடங்களாக இலங்கையின் ஆட்சியாளர்களாக பவுத்த சிங்கள பேரினவாத ஆட்சியே நடந்து கொண்டிருக்கின்றது. இன்று வரை மனிதநேய சிங்களர் ஆட்சி இருந்ததில்லை. பவுத்த சிங்களப் பேரினவாதத்தின் கருத்தியலாக்கமே, ஆலமரம் போல் வேரூன்றி விழுதுகளே வேராக தழைத்து விருட்சமாக உள்ளது.

## ராஜிவ் ஜெயவர்தனே ஒப்பந்தம்

இது இந்தியாவால் பேசி முடிக்கப்பட்ட திருமண ஒப்பந்தம் ஒரு தலைமுறையாக, திருமணத்திற்கு அழைப்பிதழ் கூட அடிக்காமல், தியதி குறிப்பிடப்படாமலும், அதற்கு இடையிலான ஏற்பாடுகளைச் செய்யாமலும், நடத்தும் செயலிலேயே, இன்றும் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் பயங்கரவாதிகள்?

இலங்கையில் பிரித்தானியர்கள் ஆட்சி நடந்த காலத்தில் இருந்த போதும், அதன்பின்னால் இலங்கைக்கு சுதந்திரம் கொடுத்து, சிங்களர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதிலிருந்து 1977 வரை தமிழர்கள் தமது குறைந்தபட்ச கோரிக்கைகளையே முன்வைத்து அகிம்சை வழியில் போராட்டங்களை நடத்தி வந்தனர். அது, அவ்வப்போது இனக்கலவரங்களாலும், கறுப்புச் சட்டங்களாலும் தடுக்கப்பட்டது.

1977-க்குப் பின்னால் ஆயுதப் போராட்டமாக திரும்பியது. இது இந்தியாவின் தலையீட்டில் இலங்கை அரசுடன், ஈழப் போராளிகளின் இயக்கங்களுடன், 'திம்புவில் பேச்சுவார்த்தையும்' தொடர்ந்து நடந்தது. இப்பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதன் பின்னால், நோர்வேயின் மத்தியஸ்தத்தில், வெளிநாடுகளில் ஸ்ரீலங்கா அரசு விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருந்தது. இப்பேச்சுவார்த்தையும் எந்தவித அறிவித்தலோ, தடையோ இன்றி நிறுத்தப்பட்டது.

1977-க்குப் பின் ஈழ சுதந்திரத்தை, ஜனநாயக வழியிலேயே பிரகடனப்படுத்திய பின்பே ஆயுதப் போராட்டங்கள் நடந்தன. இரு தரப்பினர்களுக்கும் இடையே சர்வ தேச நாடுகளின் அங்கீகாரத்துடனேயே பேச்சுவார்த்தைகளும் நடந்தது. இதில் பாரதத்தின் பங்கு குறிப்பிடத்தகும்.

திடீரென, விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று பேரினவாதிகளால் பரப்புரை செய்யப்பட்டு சர்வதேசத்தின் சில நாடுகளின் உதவியுடன் பொது மக்களும், புலிகளும் 2009-ல் இனப்படுகொலை செய்யப்பட்டு அழிக்கப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணை மூடிக்கொண்டு, விடுதலைப்புலிகளை அழித்தொழிக்க ஆதரவும், ஒத்துழைப்பும் தந்த நாடுகளெல்லாம், இனப்படுகொலை முடிந்த பின்தான் தங்கள் கண்களைத் திறந்து கண்டனத்தைத் தெரிவித்தது.

இனப்படுகொலைக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் கொடுத்த நாடுகள் எல்லாமே, ஜனநாயகத் தேர்தல் மூலமே ஆட்சிக்கு வந்தவர்கள் தான். இங்கு ஜனநாயகத்தில் கொலைக்கு எங்கே இடமுண்டு?

உலகில் இன்று வரை 'தீவிரவாதம்' பயங்கரவாதம் என்ற செயலுக்கு வரைவிலக்கணம் சொல்லப்படவில்லை. அப்படி வரையறுக்கப்பட்டால், உலகில் எத்தனையோ, அரசுகளுக்கு எதிராக அவ்வரைவிலக்கணம் திரும்பிவிடும்.

## அரங்கேற்றம் –1

ஆளை மாற்றி ஆடையையும் மாற்றியுள்ளது – வடமாகாண சபை ஆளுநர்.

## அரங்கேற்றம் –2

2009–ல் இனப்படுகொலையை தலைமைதாங்கி வழிநடத்திய இராணுவ தளபதியை, முன்னாள் அதிபர் இராஜபக்சே தனக்கு எதிராக செயல்படப்போகிறார் என்பதை அறிந்து, அவரைச் சிறையில் அடைத்து தண்டனையும் வழங்கியது. புதிய ஜனாதிபதி மைதிரிபால சிறிசேனா அரசு, "அவரைப் புனிதராக்கி இராணுவ சீருடையை மாற்றி, வெள்ளுடை உடுத்தி, பதவியும் கொடுத்து அரசினர் ஆடுகளத்தில் ஆடவிட்டிருக்கிறது".

## அரங்கேற்றம் –3

இந்திய–லங்கை ஒப்பந்தம், 13–வது திருத்த சட்டமாகும். அதை நாம் 13A என கொண்டுவரப்போகிறோம் என மயக்கமான முழக்கத்தைக் கொண்டு வருவார்களாம். அது என்ன 13A?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லிக்காய் மூட்டை பாராளுமன்றம் எதைத்தான் செய்யும்?

இலங்கையின் புதிதாக தேர்ந்து எடுக்கப்பட்ட ஜனாதிபதி, மைத்திரி பால சிறிசேனா அவர்களின் முதல் பாராளுமன்றம் 20-10-2015-ல் கூட்டப்பட்டது. அதன் பிரதமரான றனில் விக்கிரம சிங்கே ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

இலங்கை அரசியல் அமைப்புக் கட்டத்தில், 13-வது சட்டதிருத்தத்தை நாங்கள் முழுமையான கட்டமைப்புடன் நிறைவேற்றுவோம்.

நாங்கள், வெவ்வேறு கொள்கையைக் கொண்ட வெவ்வேறு அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு என்றும்; அனைத்து அரசியல் கட்சிகளிடமிருந்தும் கோரிக்கைகள், யோசனைகள், விமர்சனங்களை வரவேற்கிறோம். ஆனால் 'தேசியப் பிரச்சனைகளை ஒன்றுபட்டு எதிர் கொள்வது சவால்' என்று கூறியுள்ளார். இது எதைக் காட்டுகிறது? நெல்லிக்காய்களை மூட்டை கட்டி வைத்துள்ளோம். இவற்றை அவிழ்த்துவிட்டால் தான் தெரியும், இவை எங்கெல்லாம் சிதறி ஓடும் என்பதைத் தமிழ்பேசும் மக்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதுவும் நடைமுறைக்கு வரும் போது தான் இது உண்மைப் பேச்சா? பசப்பு வார்த்தையா? அல்லது ஏமாற்று வித்தையா என்பது தெரியவரும்.

13-வது திருத்தச் சட்டத்தில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஒரே மாகாண சபையாகும். இதைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு. (குரங்காட்டியின் கையில் அகப்பட்ட குரங்கு போலத்தான்)

காலவரையறை செய்யாமல், பொதுவாக அவசர அவசரமாக இந்த அறிவிப்பை விடுத்ததன் நோக்கம் தான் என்ன? ஜனாதிபதி அவர்கள் இந்தியா வந்து, பிரதமர் நரேந்திரமோடியை சந்திக்கவுள்ளார். இவரின் வருகையின் போது, தமிழகத்தில் எந்தவித எதிர்ப்பு அலை வீசாது, வரவேற்பை பெறவும் என்பது அரசியல் நோக்கர்கள் அறிந்ததேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே, "நான் தமிழ்ப் பேசும் மக்களுக்காக 13-வது திருத்தத்தை கொண்டுவர முயற்சித்தேன். மற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைப்பு தரவில்லை" என்று தனது இழந்துபோன அரசியல் செல்வாக்கை உயர்த்த, தமிழர்கள் பால் கருணை கொண்டவராக காட்டவும் முடியும்.

## முன்னாள் ஜனாதிபதியின் பணிவான மிரட்டல்

இந்த நேரத்தில் முன்னாள் அதிபர் இராஜபக்சே அவர்கள், 'அரசியல் காரணங்களுக்காக பழிவாங்கும் நடவடிக்கைகளை அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறேன் என்றார். இது அவர்களின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பலமான ஆதரவைக் காட்டுகிறது.

## தமிழகத்தின் தலைவர்களின் வாழ்த்தும், மகிழ்ச்சியும் ஈழத்தமிழர்களை மகிழ்விக்குமா?

இந்திய - இலங்கை உடன்பாட்டை இலங்கையின் பிரதமரான ரணில் விக்ரம சிங்கே தாம் நடைமுறைக்குக் கொண்டு வருவோம் என்ற அறிவிப்பை, தமிழகத் தலைவர்கள் வாழ்த்தியும் வரவேற்றும் உள்ளனர். ஆனால் ஈழத்தமிழர்கள் வரவேற்பார்கள் என்பது கடந்த கால அனுபவங்களின் மூலமாகவே பார்க்கமுடியும்.

இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வருவதற்கு, முதலில் காலவரையறை நிர்ணயம் செய்ய வேண்டும்.

இந்தக் காலகெடுவிற்குள் பல விடையங்கள் முன் நிபந்தனையாக எழுந்துள்ளன.

அ. வடகிழக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை வெளியேற்ற வேண்டும்.

ஆ. எந்தவித விசாரணையும் இன்றி, சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும். காணாமல் போனவர்களை வெளிக் கொண்டு வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சட்ட ரீதியாக அங்கீகரித்து இணைந்த மாநிலமாக அறிவித்து எல்லை வரையறை செய்ய வேண்டும்.

ஈ. தன்னாட்சி அதிகாரம் வழங்க வேண்டும் நிதி, பாதுகாப்பு, கல்வி, வேலைவாய்ப்பு, திட்டமிடல், இவற்றுக்கான சட்டமியற்றும் அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

உ. 1980 களிலிருந்து திட்டமிட்டுக் குடியேற்றிய சிங்களர்களை அகற்ற வேண்டும்.

ஊ. சிங்களர்களாலும், வடக்கு – கிழக்கு தமிழர்களாலும் கைவிடப்பட்ட மலையகத் தமிழர்களின் வாழ்வாதாரமும், அரசியல் உரிமைகளும் உறுதி செய்யப்பட வேண்டும். இவை அனைத்தும் நிறைவேற்றினால் மட்டுமே, ஈழத் தமிழ் தேசமும் உலகத்தமிழர்களும் நிம்மதியும், மகிழ்ச்சியும் அடைய முடியும்.

## போராடாமலேயே பேரினவாதிகள் பலன்களைப் பெறமுடியும்

இந்தியாவும், இலங்கையும், வெள்ளையர்கள் ஆட்சியின் கீழ் அடிமைப்பட்டு இருந்தபோது, இந்தியா வெள்ளையர்களுக்கு எதிராகப் போராட்டங்களை நடத்தி, இரத்தம் சிந்தி, பல்லாயிரக்கணக்கான உயிர்களைத் தியாகம் செய்தது. இந்தப் போராட்டத்திற்கு எதிராக, நிலைத்து நிற்கமுடியாத வெள்ளையர் அரசு, இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்தது. அதேபோல், 'இரத்தம் சிந்தாமலேயே இலங்கைக்கு வெள்ளையர்கள் சுதந்திரம் கொடுத்தனர்'.

கடந்த 67 வருடங்களாக அகிம்சை வழியிலும், ஆயுதவழியிலும், போராடிய தமிழ்த் தேசம், பல லட்சம் பொது மக்களும் போராளிகளும், பவுத்த சிங்கள பேரினவாத அரசுகளால் கொல்லப்பட்டும், ஊனமாக்கப்பட்டும், விதவைகளாக்கப்பட்டும், உடமைகளையும், உரிமைகளையும் இழந்த நிலையில் இந்தியாவின் நெருக்குதலால் இந்தியா முன்வைத்து காலாவதியாகப் போன 13-வது திருத்தச் சட்டத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றணில் விக்கிரம சிங்கே நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்த அறிவிப்பு, சிங்களப் பகுதியிலுள்ள மாகாணங்களுக்கும் வழங்கப்படப் போவதாக அறிவித்துள்ளார். இதில் தமிழர்களுக்கு எங்கே சிறப்பு? உயர்ச்சி!

இந்திய அரசின் வற்புறுத்தலின் பேரிலேயே இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த புதிய அரசு முன்வந்துள்ளதைத் தாங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை இந்திய இராணுவத்தின் உதவி கொண்டு நடைமுறைப்படுத்தமுடியாததும், அதன் பின்னால் வந்த பேரினவாத அரசுகளும் இவ் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என அறிவித்ததையும், கடந்த 27 வருடங்களாக அதாவது, ஒருதலை முறைக்கு காலத்தைக் கடத்திய பின் தற்போதைய அரசு, நடைமுறைக்குக் கொண்டுவருவோம் என வரைமுறை ஏதும் இல்லாது அறிவித்துள்ளது.

எனவே, தாங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து, காலம் தாழ்த்தாது, காலக் கெடுவை நிர்ணயிக்குமாறு மேற்கண்ட நிபந்தனைகளை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு தங்களின் மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுக்குமாறு ஈழ தமிழ்தேசம் சார்பாக, ஈழ ஆய்வு நிறுவனம் தொப்புள் கொடி உறவுகளான தமிழக மக்களிடம் வேண்டிநிற்கிறது.

இவ்வண்ணம்,

**ஈழ ஆய்வு நிறுவனம் (EROS)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் பேசும் மக்களே பேரினவாதத்தை மீண்டும் மீண்டும் நம்பி ஏமாற வேண்டாம்.

அது நிதி திட்டமிடலைப் பேசினால், நிதி ஒதுக்கீட்டைப் பற்றி பேசுகிறது.

பிரதேச பாதுகாப்பைப் பற்றி பேசினால், உனக்கு எங்கே பிரதேசம் உள்ளது என கேள்வி எழுப்புகிறது.

நாம் ஒரு தேசிய இனம் என்று கூறினால், இல்லை நீ ஒரு இனக்குழுதான் என்கிறது. எல்லைப் பாதுகாப்பு என்று பேசினால், அங்கு சிங்கள குடியேற்றங்களைச் செய்கிறது.

மீண்டும் பேரினவாதம் ஆளையும் மாற்றி ஆடையையும் மாற்றி ஆடுகளத்தைத் தக்கவைத்துக் கொள்கிறது.

## கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை

சுதந்திரம் - தன் தலைவிதியை தானே தீர்மானிக்கும் உரிமை

பதில் - மாவட்ட அபிவிருத்தி சபை

மாவட்ட அபிவிருத்தி சபை எங்கே என்று கேட்டால் - கலவரம்

கலவரம் அடக்கப்பட்ட பின்பு - அதிகாரப் பகிர்வு.

அதிகாரப்பகிர்வு - அபிவிருத்தி என்ற சலுகை மட்டுமே

சலுகைகள் எங்கே - இனஅழிப்பு இனப் படுகொலை.

இனவாத பூதத்தை இனி ஒருபோதும் நம்பச் சொல்ல வேண்டாம். அதனாலே தான், ஜனாதிபதி கூட தேர்தல் நேரத்தில் தாங்கள் பிசாசுகள் என்று பாரதம் கேட்கும்படியாக உரக்கச் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழதேசத்தின் சுதந்திரமே தெற்காசியாவின் சமாதானம்

எப்போதுமே உலக சமாதானம் பொதுவானது. அதிலும் தெற்காசியாவின் சமாதானம் தனியானவது. தெற்காசியாவில் இலங்கையின் சமாதானம் – ஈழதேசத்தின் சமாதானம் குறிப்பானது.

ஈழப் பிரச்சனையின் தீர்வாக "இந்திய – இலங்கை" ஒப்பந்தத்தை அதாவது 13–வது திருத்தச் சட்டத்தை, தெற்காசியாவின் தலைமை நாடான இந்தியா முன் வைக்கிறது.

13–வது திருத்தச் சட்டம் இதுவரை என்ன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. இது எந்த வகையிலும் ஈழத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு நன்மை தரப் போவதில்லை. இந்தக் குறைந்தபட்ச தீர்வுத் திட்டத்தை கூட நடைமுறைப்படுத்துவதில் பவுத்த சிங்கள பேரினவாத அரசு பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதுதான் மேலோட்டமாக "அதிகாரப் பகிர்வு" என்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

## ஈழதேசத்தின் வாயையும், கையையும் கட்டிவிட்டு சமாதானம் எப்படி பேச முடியும்?

2009–ல் யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது என்று பேரினவாத பிரகடணம் செய்தது. அதற்குப்பின்னால் ஈழப்பகுதிகளின் புதுப்புது இராணுவ முகாம்களை பெருக்கிக் கொண்டது. அத்துடன் இனச்சுத்திகரிப்பு வேலையையும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த சூழலை வைத்துக் கொண்டே அதிகாரப்பகிர்வு செய்யப்போகிறேன் என்று பேசுகிறது. இது "நான் கொடுப்பதை நீ வாங்கிக் கொள்" என்ற அர்த்தமாகாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலத்தை உழுது பண்படுத்தித்தான் விதையை விதைக்க வேண்டும்.

முதலில் சமாதானம் பேசுவதற்கு மக்களின் அச்சம் போக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது முன் நிபந்தனையாகிறது.

1. ஈழதேசத்திலுள்ள இராணுவத்தை அகற்ற வேண்டும். இதற்கு அரசுக்கு ஒரு வாரமே போதுமானதாகும்.

2. எந்தவித வழக்குகளும் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்ட அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும். இதை நடைமுறைக்கு கொண்டு வர ஒருவாரம் போதாதா?

3. காணாமல் போனவர்கள் கதி இன்று வரை வெளிப்படாமலேயே உள்ளது. இதை அரசு உடனடியாக வெளிக்கொண்டு வர ஆவண செய்ய வேண்டும்.

4. போருக்குப் பின் அகதிகளாக்கப்பட்டவர்களுக்கும் வீடுவாசல், தொழில்துறைகளை இழந்தவர்களுக்கு மறுசீரமைப்பு நடைபெறவில்லை. ஆனால் மறுசீரமைப்பு என்ற பெயரில் கட்டிய வீடுகளில் சிங்களர்களையும், தமிழர் நிலங்களைப் பறித்து சிங்களர்களையும் குடியேற்றம் செய்து கொண்டிருக்கிறது இங்கு பாதிக்கப்பட்ட தமிழ்ப்பேசும் மக்களுக்கு 'மறுகுடிஅமர்த்தல், மறுசீரமைப்பு' மிக அவசியமாகிறது.

இவற்றை நடைமுறைக்குக் கொண்டு வந்தால் தான், 'அதிகாரப் பேச்சு' என்பது அர்த்தமுள்ளதாக அமைய வாய்ப்பு ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13–வது திருத்தச் சட்டம் ஏற்படுத்தப்பட்டு அதிகாரங்கள் வழங்குவது சம்மந்தமாக.

1. வடக்கு – கிழக்கு மாகாணங்களை இணைத்து அது தமிழர் தாயகப் பிரதேசமாக அங்கீகரிக்க வேண்டும்.

2. தமிழர் தாயகப் பிரதேசத்தில் எல்லைகள் வரையறுக்கப்பட வேண்டும்.

3. நீதி – சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.

4. நிதி திட்டமிடல் – வங்கி – காப்பீடு

5. கல்வி, வேலைவாய்ப்பு, பெரும் தொழிற்சாலைகள் அமைத்தல்

6. போக்குவரத்து, துறைமுகம், கடல்சார் வளங்கள்

7. பாதுகாப்பு இவைகளுக்கான தனித்தனியான அலகுகள், சரத்துக்கள் என்னென்ன என்பதை வெளிப்படையாக தெரிவிக்க வேண்டும்.

உதாரணமாக கிராமங்களில் மாட்டு வியாபாரிகளும், மாடு விற்பவனும், தரகர் மூலம் மாட்டை விற்கப்போனால், தரகரும், வியாபாரியும் தங்கள் கை விரல்களை பிடித்துக்கொண்டு கைமேல் துண்டைப் போட்டு விலையை முடிவு செய்வார்கள். மாட்டுக்காரன் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டு நிற்பான். முடிவு வெளிவந்ததும் தான் தெரியும் மாடு எந்தப்பக்கம் போகும் என்று.

பவுத்த சிங்களப், பேரினவாதிகளைத் திருத்திப்படுத்துவதற்காகவே, ‘அதிகாரபரவல்’ எல்லா மகாணங்களுக்கும் கொண்டுவரப் போவதாக அறிவித்துள்ளது அரசு இதுவும் நல்ல விடயம் தான்.

அமைதியும், சமாதானமும் ஒட்டுமொத்த மக்களின் விருப்பங்களின் பேரில் செய்யும்போது தான் நிலைத்துநிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த சமாதானத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு, அரசு பேரினவாதிகள் மத்தியில் பல இன்னல்களைச் சந்தித்து ஆக வேண்டும். இதற்கு சிங்களர் பகுதியில் இராணுவத்தை நிறுத்தினால் கூட நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது என்பது தமிழ் தேசத்தின் வரலாற்று அனுபவம்.

முத்தாய்ப்பாய், இந்த அதிகாரங்களை எல்லாம் கொடுத்துவிட்டு, எந்த நேரத்திலும் பறிக்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் மேன்மை தங்கிய பேரினவாத நிறைவேற்றும் அதிகாரம் கொண்ட, ஜனாதிபதியின் கையிலேயே தான் உள்ளது.

இந்த நிலையில் மீண்டும், மீண்டும் பேச்சுவார்த்தை, அதிகாரப்பரவல் என்று சொல்லிக் கொண்டு காலத்தைக் கடத்தி அமைதியைக் கெடுக்கும் சூழலையே உருவாக்கும். மீண்டும் ஒரு யுத்தத்திற்கு வழி அமைக்கும்.

**<u>மக்களின் விருப்பம் எப்போதுமே அமைதியும், சமாதானமும் தான்.</u>**

ஆகவே தான், மீண்டும் ஈழப் போராட்டமும், உலகமும், ஐ.நா.வும் காட்டிய வழியில் ஆயுதமற்ற ஜனநாயகத் தன்மை கொண்ட "பொதுமக்கள் வாக்கெடுப்பு" என்ற வழிமுறையைக் காட்டி நிற்கிறது. <u>இனி யாரும் சாகவேண்டாம்</u> என்ற உயர்ந்த வழிகாட்டுதலை ஐ.நா. சபை வழிகாட்டியுள்ளது. இதன் வழி 15-க்கு மேற்பட்ட நாடுகள் சுதந்திரம் பெற்றுள்ளன. இதைப் பின்பற்றி நாம் அனைவரும் ஒருங்கிணைந்து, ஒரே குரலில் ஒரே கோரிக்கையாக "பொதுமக்கள் வாக்கெடுப்பை" நாகரீக சமூகத்திடம் விண்ணப்பிப்போம் என்று ஈழ ஆய்வு நிறுவனம் கோருகிறது.

இவ்வண்ணம்,

ஈழ ஆய்வு நிறுவனம் (EROS)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிமூன்றாவது திருத்தச் சட்டத்தின் முக்கிய அம்சம் வடக்கு – கிழக்கு இணைப்பு.

இதுப்பற்றி இதுவரை ஸ்ரீலங்கா அரசு வாய்திறக்காதது ஏன்?

2/3 பங்கு பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட பவுத்த சிங்கள பேரினவாத அரசின் பாராளுமன்றத்தின் 1/3 பங்கு தமிழ்ப்பேசும் அங்கத்தினரின் நியாயமான கோரிக்கைகள் எதுவும் சொல்லும்படியாகாது. இது எமது வரலாற்று அனுபவங்கள்.

"மதம் பிடித்தால் மனித நேயம் சாகடிக்கப்படும்"

**ஈழ ஆய்வு நிறுவனம் (EROS)**

– – – – – –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org